Registered as a Newspaper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆடி 24 | [ 08-08-1993 ] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 171

## எக்ஸ்-றே கருவியின் செயற்பாட்டிற்கு ஜெனறேற்றரின் சக்தி போதாது

பிரித்தானிய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மின் பிறப்பாக்கியில் (ஜெனறேற்றர்) ஒன்றை யாழ். பொது வைத்தியசாலைக்கு கொண்டு வருமிடத்து மட்டுமே அங்கு இயங்கும் எக்ஸ்-றே பிரிவின் முழுமையான செயற்பாட்டை பெற்றுக் கொள்ள முடியுமென வைத்தியசாலை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. யாழ். பொது வைத்தியசாலையின் எக்ஸ்-றே பிரிவில் மின் பற்றாக்குறையைஅடுத்து ஏற்கனவே பெரிய அளவிலான எக்ஸ்-றே சாதனம் செயற்படாமல் வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் அண்மையிலும் ஓர் எக்ஸ்-றே சாதனம் [சிறிது] கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. எனவே இவற்றை பூரணமாக இயக்குவதற்குத் தேவையான மின்சக்தி இல்லாமையை அடுத்து மேற்படி அலுவல்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி மின் பிறப்பாக்கிகள் இரண்டையும் யாழ்ப் [4ஆம்பக்கம்பார்க்க]

# பொருளாதார தடை தளர்த்த சிங்கள அரசாங்கம் மறுப்பு

## ராணுவத்தின் முயற்சி புலிகளால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பண்ணைப்பகுதிநோக்கி முன்னேற எடுத்த முயற்சி தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலால் முறியடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 6.15மணியளவில் மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பண்ணைப்பகுதிநோக்கி 125 மீற்றர் வரை முன்னேறி வந்தபோது அவர்களை தடுத்து நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கினர். இம் மோதலின்போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## கைதிகள் விவகாரத்தில் கொழும்பிற்கு அக்கறையில்லை

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பதில் சிறிலங்கா அரசாங்கம் பெரியளவில் அக்கறை எதையும் காட்டுவதாக இல்லை. வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தி தடைசெய்யப்பட்ட பொருள்களை அனுப்பி வைக்க சிறிலங்கா அரசாங்கம் மறுத்துள்ளது. இதேவேளை, அரசாங்கம் கைதிகள் விவகாரத்தில் அக்கறையாகச் செயற்படுவதாகக் காட்டிக் கொள்ளும் நோக்கில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளது.

போர்க் கைதிகள் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னேற்றகரமான முடிவுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

இக்கூட்டத்தில் யுத்தக்கைதிகள் விடுதலைக்காக வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்த அரசாங்கம் தயாராக இல்லை என்பது வலியுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ஜனாதிபதியுடன் பாதுகாப்புபடை அதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஏற்புடைய சமரசத் திட்டம் எதுவும் இன்றியே யாழ் திரும்பியுள்ளார்.

இதேவேளை யுத்தக்கைதிகளை விடுதலைப் புலிகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## குமாரியில் 96 தபால் பொதிகள்

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் ''குமாரி' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக் கப்பலில் யாழ். குடாநாட்டிற்கான சுமார் 96 தபால்பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன. இத் தபால்கள் இன்று எடுத்துவரப்பட்டு நாளை விநியோகிக்கப்படவுள்ளதாக தபால்திணைக்கள வட் ( 4 ஆம் பக்கம் பார்க்க)

## போர்விமானங்கள் தயாரிக்க பொறியியலாளர் ஒன்றியம்

### புலிகள் அமைத்துள்ளனராம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சிறிய அளவிலான விமானங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை விடுதலைப் புலிகள் அமைத்துள்ளதாகவும் அத்தொழிற்சாலைகள் விமானங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டதாகவும் ராணுவ புலனாய்வு தகவல்களை மேற்கோள் காட்டி 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களைப் பாவித்தே இவ் விமானங்கள் உருவாக்கப்படுவதாகவும் இச் சிறிய விமானங்கள் கராஜினுள் வைத்துப் பூட்டப்படக்கூடியதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ் விமானங்களை உற்பத்திசெய்ய விடுதலைப் புலிகள் விசேட பொறியியலாளர் ஒன்றியம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளனர் எனவும் எதிர்காலத்தில் இவ் விமானப் பொறியியலாளர் ஒன்றியபொறியியலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி மேலதிகப் பயிற்சி வழங்கி பெரிய தாக்குதல் விமானங்களை உற்பத்தி செய்வதற்குத் திட்டம் தீட்டி இருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறு விமானங்களை தயாரிக்கும் தொழிற் (4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் கைதானோர் பலாலியில் தடுத்து வைப்பு

கிளாலிக் கடற்பரப்பில் கடந்த மாதம் 29ஆம் திகதி சிறிலங்கா கடற்படையினரினால் தாக்கப்பட்ட இரண்டு பயணிகள் படகிலிருந்து ஒன்பதுபேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளவர் என தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவர்களில் ஏழுபேர் பலாலி சிறிலங்கா இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் காயமடைந்த இருவர் அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

மேற்படி கைதுசெய்யப்பட்டவர்களின் விபரங்கள் அவர்களின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

## அரச அதிபர் - உண்ணாவிரதிகள் சந்திப்பு

# அரசின்நிலைப்பாடு குறித்து கைதிகளுக்கு விளக்கம்

## நேர்முகப் பரீட்சைக்கு சென்ற தமிழ் பெண் அதிகாரி கொழும்பில் கைதானார்

## கிழக்கிலங்கையில் புத்திஜீவிகள் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு தமிழ் புத்திஜீவிகளை அழிப்பதில் தீவிரமாக இறங்கியுள்ளது.

மட்டக்களப்பு பகுதியில் தொடர்ச்சியாக டாக்டர்கள் ...

...ணுவத்தினர் கடத்திச் செல்கின்றனர். கடத்திச் செல்லப் படுபவர்கள் பற்றி இராணுவ முகாம்களில் விசாரிக்கும் போது அவ்வாறு யாரையும் தாம் கடத்தவில்லையென்றும்

சாங்கம் கைதிகள் விவகாரத்தில் அக்கறையாகச் செயற்படுவதாகக் காட்டிக் கொள்ளும் நோக்கில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளது.

போர்க் கைதிகள் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னேற்றகரமான முடிவுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

இக்கூட்டத்தில் யுத்தக்கைதிகள் விடுதலைக்காக வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்த அரசாங்கம் தயாராக இல்லை என்பது வலியுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ஜனாதிபதியுடன் பாதுகாப்புபடை அதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஏற்புடைய சமரசத் திட்டம் எதுவும் இன்றியே யாழ் திரும்பியுள்ளார்.

இதேவேளை யுத்தக்கைதிகளை விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

( 4 ஆம் பக்கம் பார்க்க)

பத்தி செய்யும் தொழிற்சாலை

# கிளாலியில் கைதானோர் பலாலியில் தடுத்து வைப்பு

கிளாலிக் கடற்பரப்பில் கடந்த மாதம் 29ஆம் திகதி சிறிலங்கா கடற்படையினரினால் தாக்கப்பட்ட இரண்டு பயணிகள் படகிலிருந்து ஒன்பதுபேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவர்களில் ஏழுபேர் பலாலி சிறிலங்கா இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் காயமடைந்த இருவர் அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

மேற்படி கைது செய்யப்பட்டவர்களின் விபரங்கள் அவர்களின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

புலனாய்வு தகவல்களை மேற்கோள் காட்டி 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களைப் பாவித்தே இவ் விமானங்கள் உருவாக்கப்படுவதாகவும் இச்சிறிய விமானங்கள் கராஜினுள் வைத்துப் பூட்டப்படக்கூடியதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ் விமானப் பொறியியலாளர் ஒன்றியபொறியியலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி மேலதிகப் பயிற்சி வழங்கி பெரிய தாக்குதல் விமானங்களை உற்பத்தி செய்வதற்குத் திட்டம் தீட்டி இருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறு விமானங்களை தயாரிக்கும் தொழிற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் - உண்ணாவிரதிகள் சந்திப்பு

# அரசின்நிலைப்பாடு குறித்து கைதிகளுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ள போர்க் கைதிகளை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்றுக் காலை சந்தித்தார். இச் சந்திப்பின் போது அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து போர்க் கைதிகளுக்கு எடுத்து விளக்கினார். மேலும் போர்க் கைதிகளின் நடவடிக்கை குறித்த முடிவு அவர்களின் கையிலேயே தங்கியுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் புலிகளிற்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் நடந்த சந்திப்பு விவரங்கள் அரச அதிபரால் கொழும்பிற்கு அறிவிக்கப்பட்டதாகவும் ஆனால் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என நேற்றுமாலை அரச அதிபருக்கு கிடைத்துள்ளதாகவும் வனொலிச் செய்தெரியவந்துள்ளது.

இதேவேளை புலிகளுடன் இடம்பெற்ற சந்திப்பு விவரங்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பெண் அதிகாரி கொழும்பில் கைதானார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் இருந்து நேர்முகப்பரீட்சை ஒன்றிற்காக கொழும்பிற்குச் சென்ற பெண் தொழில் அதிகாரி ஒருவரை கொழும்பில்வைத்து பொலிசார் கடந்த சில நாட்களிற்கு முன்னர் கைது செய்துள்ளனர்.

இவர் இதுவரை விடுதலை செய்யப்பட்டதாக தகவல் ஏதும் கிடைக்கவில்லை

மேலும் இப் பெண் அதிகாரியின் விடுதலை தொடர்பாக யாழ். அரச அதிபர் கொழும்பில் தங்கியிருந்த சமயம் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவைச் சந்தித்து பேசியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. [பா] [க]

# கிழக்கிலங்கையில் புத்திஜீவிகள் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு தமிழ் புத்திஜீவிகளை அழிப்பதில் தீவிரமாக இறங்கியுள்ளது.

மட்டக்களப்பு பகுதியில் தொடர்ச்சியாக டாக்டர்கள் ஆசிரியர்கள், பொறியியலாளர்கள் போன்றபலதரப்பட்ட உத்தியோகஸ்தர்களை இராணுவத்தினர் கடத்திச் செல்கின்றனர். கடத்திச் செல்லப் படுபவர்கள் பற்றி இராணுவ முகாம்களில் விசாரிக்கும் போது அவ்வாறு யாரையும் தாம் கடத்தவில்லையென்றும் தமது முகாம்களில் ஒருவரும் இல்லையென கைவிரிக்கிறார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓரேஇரவில் மூன்று குண்டு வெடிப்புகள்

# இனத்துவேஷத்தை தூண்ட திரைமறைவில் சதி

இனத்துவேஷத்தை தூண்டுவதற்கு திரைமறைவில் சதி நடக்கின்றது. எனவே கதிரேசன் கோவில் குண்டு வெடிப்பு சம்பவத்தை புலிகளின் தலையில் சுமத்திவிட்டு அரசாங்கம் அசமந்தமாக இருந்துவிடக்கூடாது என்று ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் பேசிய அவர் தொடர்ந்து கூறுகையில், கொழும்பில் நடந்துள்ள இக் குண்டு வெடிப்பு சம்பவத்தை உதாசீனம்செய்து

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# எமது கோரிக்கைகளுக்கு அரசு மதிப்பளிக்கவில்லை

## யுத்தக் கைதிகள் கவலை

"எமதுவிடுதலைக்காக நாம் மேற்கொள்ளும் இறுதி நடவடிக்கையே இந்த உண்ணா விரதப் போராட்டமாகும். ஆனால் எமது உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அரசு இதுவரை மதிப்பளித்ததாகத் தெரியவில்லை" இவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவரும் சிங்கள யுத்தக்கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இன்றுடன் 11ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவரும் சிங்கள யுத்தக் கைதிகள் அரசிடமிருந்து தமது விடுதலை தொடர்பாக உறுதியான பதில் வரும்வரை தமது போராட்டம் தொடரும்என்று எமது செய்தியாளர்களிடம் கூறியுள்ளனர்.

அரசு எமது உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மதிப்பளித்து எம்மை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் உயிர்துறக்கத் தயராக உள்ளதாகவும் யுத்தக்கைதிகள் மேலும் தெரிவித்தனர். [க] [சி]

## யுத்தக்கைதிகள் விடுதலை

# தொண்டர் நிறுவனங்களின் முயற்சிகள் தோல்வி

(கொழும்பு)

சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு சில அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கொழும்பில் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சில அரச சார்பற்ற மற்றும் மத ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் சிங்கள யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரசுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் இப் பேச்சு வார்த்தைகள் மேற்படிவிடயம் தொடர்பாக எந்தவித முன்னேற்றத்தையும்ஏற்படுத்தவில்லை என்றும் கொழும்பில் இருந்து நேற்றுமாலை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முயற்சி தோல்வியடைந்ததையடுத்து கொழும்பில் உள்ள ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களும் மேற்படி கைதிகள் விடயத்தில் அக்கறை செலுத்தும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டதாகவும் மேலும் தெரியவருகிறது. (க)

# மின்பிறப்பாக்கிக்கு பிரிட்டன் உதிரிப்பாகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள 85 கே. வி. மின்பிறப்பாக்கியை திருத்தியமைப்பதற்கு பிரிட்டிஷ் கொம்பனி ஒன்றிடமிருந்து உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு யாழ் வைத்திய சாலை நடவடிக்கை எடுத்துள்ளது.

சமீபத்தில் திருத்தி உபயோகிக்கப்பட்டுவந்த இந்த மின்பிறப்பாக்கி (ஜெனறேற்றர்) சில தினங்களாக பழுதடைந்த நிலையில் செயலிழந்து காணப்படுகிறது.

இதனால் வைத்தியசாலையில் முக்கிய செயற்பாடுகள் மேற்கொள்ள சிரமமாகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற் குறிப்பிட்ட மின்பிறப்பாக்கி முதலும் பல தடவைகள் பழுதடைந்து கொழும்பிலிருந்து உதிரிப்பாகங்கள் எடுத்து வரப்பட்டு திருத்தியமைக்கப்பட்டபோதிலும் அது பலனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி), (பா)

# மருத்துவ உபகரண பட்டியலை அனுப்புக

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் வடபகுதிக்கென அன்பளிப்புச் செய்யப்பட்டு, தற்போது கொழும்பில் வைக்கப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களின்பட்டியலை அனுப்பி வைக்கும்படி யாழ். போதனா வைத்தியசாலை பிரிட்டிஷ் அரசாங்கத்தை கேட்டுள்ளது.

இப் பொருள்கள் அடங்கிய கொள்கலன் திறக்கப்படாத நிலையில் கொழும்பில் வைக்கப்பட்டுள்ளது. இதனால் இக் கொள்கலனுக்குள் உள்ள பொருள்களின் விபரங்களை அறிய முடியவில்லை என்றும், பொருள்களின் விபரங்கள் அறியப்பட்ட பின்னர் முக்கிய தேவையைக் கருதி கட்டங்கட்டமாக மருத்துவ உபகரணங்களை எடுத்துவரலாம் என்றும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் மண்ணெய் எடுத்து வந்து மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடிய உத்தரவு பெற்ற எரிபொருள் வியாபாரிகள் சகலரையும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9. 00 மணிக்கு யாழ்.

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# செயலகத்திற்கு மண்ணெய் விநியோகம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்துக்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் மண்ணெண்ணெய் எடுத்து வரப்படுவதுதற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெற்றுப் பீப்பாக்கள் முற்றாகத் தீர்ந்து விட்டமையினாலேயே இவ்வாறு மண்ணெண்ணெயை அனுப்பி வைப்பது தற்காலிமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும்

[ 4 ஆம் பக்கம் பார்க்க]

# கைதிகளின் உறவினர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளை பார்வையிட வந்தவரான பி. சுமித்தா (வயது28) என்பவர் மயக்கமுற்றநிலையில் நேற்று மாலை யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் உண்ணாவிரதமிருக்கும் யுத்தக்கைதி ஒருவரின் உறவினர் என தெரியவருகின்றது. (சி)

## வரி விளம்பரம்

### சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தப புத்தக நிலயம், 405 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (5592)

### சேவல் குஞ்சுகள்

ஒன்றரை மாத பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விறாத்துக் குஞ்சுகளும் பெற்றுக் கொள்ளலாம். 1010/9 கே கே. எஸ். வீதி. (நாச்சிமார் கோவிலடி) யாழ்ப்பாணம். (5630)

### தேவை

சோழிபுதீன் வெற்றுப்பக்கற் வாங்குகிறோம். தொடர்பு - மில்க்வைற் (சி/7161)

### தேவை

மாட்டுப்பண்ணை தோட்ட வேலை செய்வதற்கு அமைய அடிப்படையில் ஆள் தேவை, சுயமாக தயாரித்த விண்ணப்பத்தை 12-08-93-ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும் பதில் பொதுமுகாமையாளர். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் [சி/7162]

### English Classes

புதிய வகுப்புக்கள் 09 08 1993 அன்று காலை 9 00 மணிக்கு ஆரம்பமாகின்றன. கிழமை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் தொடர்புகட்கு: K சபாநாயகம், 4, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. (சி-7164)

### ஓய்வூதியக் கொடுப்பனவு

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும் உள்ளுராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வூதியக்காரர்களின் கூஆடி மாத கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருவதாக அதன் முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் தெரிவித்தார். (22)

மருந்து வகைகளுக்கு




நல்லூர்க்கந்தன் உற்சவத் திருநாளிலே அவனருள்
அனைவருக்கும் கிட்ட எமது நல்லாசிகள்!

வாடிக்கையாளர்கள், நுகர்ச்சியாளர்கள், ஆதரவாளர்கள்,

## நினைவு கூருகின்றோம்...

## 1993-08-08

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு பனையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பாரவண்டி உரிமையாளரான வேம்பொடுகேணியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் மாறன்** [தங்கராசா கிருஷ்ணன் - கச்சாய் வீதி, சாவகச்சேரி - யாழ்]

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய -

**நௌசாத்** [நவரட்ணம் பவானந்தா - இளவாலை வடக்கு - யாழ்]

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**குஞ்சன்** ( — — கண்டி)

சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய -

**வசந்தா** (மஞ்சுளாதேவி அந்தோனிப்பிள்ளை - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்.

மட்டுநகரில சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட ஏறாவூரை சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர் 04 ஐச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். நிந்தவூர் இந்துக்கோயில் இடம்பெயர்ந்தோர் முகாமில் வைதது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 27 தமிழர்கள். கல்லடிப் பாலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட புதுநகர் 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழிளைஞன் காத்தான்குடியில் முஸ்லிம் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாம்மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட சிறுமி உட்பட 3 தமிழர்கள். யாழ் புகையிரத நிலையப் பகுதியிலான விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட சிறுவன் மற்றும் பரியோவான் கல்லூரி ஆசிரியர் உட்பட 9 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2ம் லெப். வீசா** (பிறின்ஸ்ராகல் ராஜன் - 6-ம் கட்டை, பாலையூற்று - திருமலை)

**2-ம் லெப். இளங்கதிர்** (ஆறுமுகம் ரகுகுமார் - பாலையூற்று - திருமலை)

**2ம் லெப். அமலதாஸ்** (நடராசா சிறீதரன்-அன்புவழிபுரம் -திருமலை)

**விக்ரர்** (இராசரத்தினம் சத்தியபாலன்-புல்மோட்டை-திருமலை)

**விஜி** (பாலச்சந்திரன் இலங்கேஸ்வரன்-புதுக்குடியிருப்பு, குச்சவெளி-திருமலை)

**கவி** (யோகராசா சிவபாலன்-4-ம் கட்டை, புல்மோட்டை திருமலை)

**தியாகராஜன்** (முருகையா ராஜ்-பாலையூற்று-திருமலை)

**கில்பேட்** (ஜோண்சிங்கம் செல்வராஜா-5-ம் வாய்க்கால், டன்குளம்-திருமலை)

**ஜீவராசா** (சின்னையா நாதன் - தண்ணீரூற்று-முள்ளியவளை-முல்லைத்தீவு)

**பில்லா** (வேலாயுதபிள்ளை கருணன்-அம்பலவன் பொக்

லும் தொடர்புகட்கு: K
சபாநாயகம், 4, பிள்ளையார்
ஒழுங்கை, திருநெல்வேலி.
(சி-7164)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும் உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வூதியக்காரர்களின் கூஆடி மாத கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருவதாக அதன் முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் தெரிவித்தார். (22)

## மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

(தொல்புரம்)

தொல்புரம் பாணாவெட்டி அரசினர் ஆங்கில வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் நோயாளர்களுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளான பனடோல், பீகோ, டெறாசைக்கிளின் போன்ற வகைகளுக்கும், காயக்காரர்களுக்கு பாவிக்கும் பன்டேச், பஞ்சு, பிளாஸ்டர் போன்றவகைகளுக்கும், ஊசிமருந்துவகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது இங்கு சிகிச்சைக்காக சுமார் 300 நோயாளர் வரை தினமும் வருகை தருகின்றனர் அத்தோடு இப்பகுதியில் அநேக இடம்பெயர்ந்தோர் முகாம்களும், இடம்பெயர்ந்த மக்கள் தொகையினரும் சூழவுள்ள, வசதியற்ற மக்கள் வழும இப்பகுதிக்கு இலவச ஆஸ்பத்திரி இந்த ஒன்றே காணப்படுகின்றது (41)

★ ★

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்குரிய மருந்து வகைகளுக்கு பலத்த தடடுப்பாடு ஏற்பட்டுள்ளது

இவ் வைத்தியசாலையில் சுமார் இருநூறு நீரிழிவு நோயாளிகள் கிளனிக் முறையில் சிகிச்சை பெறுகின்றனர் மேற்குறித்த நோயாளிகள் உரிய மருந்துகள் இல்லாமல் கஷ்ட நிலையை எதிர் நோக்குகின்றனர்.

கொழும்பிலிருந்து மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்படாததே இதற்குக் காரணமென தெரியவருகிறது. பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையிலும் நீரிழிவு நோய்க்குரிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யோ)




நல்லூர்க்கந்தன் உற்சவத் திருநாளிலே அவனருள்
அனைவருக்கும் கிட்ட எமது நல்லாசிகள்!

வாடிக்கையாளர்கள், நுகர்ச்சியாளர்கள், ஆதரவாளர்கள்,
விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள், ஊழியர்கள் அனைவருக்கும்

**எமது இதயம் கனிந்த நன்றிகள்.**

தரம் - சுத்தம் - சுவை - சுகாதாரம்
அத்தனையும் நிறைந்து
அமோக ஆதரவுடன் முன்னணியில்

# புத்தூக்கி - REFRESHER

**மென்பானங்கள்**

அத்துடன் அனைவரதும் பாராட்டுப் பெற்று, உள்ளம் மகிழ வைக்கும் இன்சுவை

**★ "சோக்கா" - CHOCA ★ சொக்லட்**

மற்றும்

✻ ஸ்ரோபெறி ✻ பைன் அப்பிள் ஜாம்வகைகள்
கூல்மன்ஸ் Coolmans (உடன் பழச்சாறு)
✻ புத்தூக்கியின் நெல்லிரசம் New Crush - Refresher
✻ ஜப் பிக்ஸ் கம் - JAF - FIX GUM

அத்தனையும் வாங்க நாடுங்கள்

யாழ். பகுதி தெங்கு பனம் பொருள் கூ. ச. கொத்தணி

**நல்லூர் உற்சவ காட்சியகம் - நல்லூர்.**

(சி-7163)


சிறுவன் மற்றும் பாலேயோவான் கல்லூரி ஆசிரியர் உட்பட
9 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2ம் லெப். விசா (பிறின்ஸ்ராகல் ராஜன் - 6-ம் கட்டை, பாலையூற்று - திருமலை)
2-ம் லெப். இளங்கதிர் (ஆறுமுகம் ரகுகுமார் - பாலையூற்று - திருமலை)
2ம் லெப். அமலதாஸ் (நடராசா சிறீதரன்-அன்புவழிபுரம் -திருமலை)
விக்ரர் (இராசரத்தினம் சத்தியபாலன்-புல்மோட்டை-திருமலை)
விஜி (பாலச்சந்திரன் இலங்கேஸ்வரன்-புதுக்குடியிருப்பு, குச்சவெளி-திருமலை)
கவி (யோகராசா சிவபாலன்-4-ம் கட்டை, புல்மோட்டை திருமலை)
தியாகராஜன் (முருகையா ராஜ்-பாலையூற்று-திருமலை)
கில்பேட் (ஜோண்சிங்கம் செல்வராஜா-5-ம் வாய்க்கால், டன்குளம்-திருமலை)
ஜீவராசா (சின்னையா நாதன் - தண்ணீரூற்று-முள்ளியவளை-முல்லைத்தீவு)
பில்லா (வேலாயுதபிள்ளை கருணன்-அம்பலவன் பொக்கணை-முல்லைத்தீவு)
செல்விற் (வேலாயுதம் நாகேஸ்வரன்-தண்வான், நெடுங்கேணி மணலாறு)
2-ம் லெப்.சிவபாலன் (மருதுப்பிள்ளை சத்தியநாதன்-பூந்தோட்டம்-வவுனியா)
2-ம் லெப்.வாசு (கருப்பையா மாணிக்கம்-பூந்தோட்டம்-வவுனியா)
லெப்.காந்தி (கந்தசாமி கிருஷ்ணகுமார் - வன்னிவிளாங்குளம்-மாங்குளம்)
லெப்.வரன் (சுந்தர் தர்மகுலசிங்கம் - சிவன்கோயிலடி, உருத்திரபுரம் - கிளிநொச்சி)
டவஸ் (குழந்தைவேல் ஜெயரட்ணம்-அம்பாள்குளம்-கிளிநொச்சி)
ஜோதி (பாலசிங்கம் றூபராசா-சிவன்கோயில்வீதி, உருத்திரபுரம்-கிளிநொச்சி)
மாக்ஸ் (பத்மநாதன் ராஜ்குமார் தட்சணாமருதமடு, மடுக்கோயில்-மன்னார்)
2-ம் லெப் யசோ (பஞ்சலிங்கம் ராஜ்குமார்-ஆதிகோவிலடி-வல்வெட்டித்துறை)
ஆனந்தன் (தங்கரத்தினம் ரவிச்சந்திரன்-ஆனந்தன்வீதி, ஆனைக்கோட்டை - யாழ்)
ஜெனா [சிறிதங்கராஜா சிறிநவநீதன்-மீசாலை வடக்கு. கொடிகாமம்-யாழ்]
சங்கர் [இந்திரலிங்கம் கிரிதரன்-162, கடற்கரைவீதி-பருத்தித்துறை]
பகீர் [ஜெயராசா சுனில்-சிறுவிளான், இளவாலை-யாழ்]
பதுமநிதி [சுதாஜினி சிறிதரன்-வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி-யாழ்]

1992ஆம் ஆண்டு யாழ்-வளலாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

லெப்.ஆனந்தகுமார்/சாள்ஸ் [பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன்-சித்தன்கேணி, வட்டுக்கோட்டை-யாழ்]

மட்டு-3-ம் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப்.பிருந்தவராஜ் (சின்னத்தம்பி குகேந்திரன்-கொக்கட்டிச்சோலை-மட்டு)

ஆதரவாளர்:
நோகநாதன் ரூபகுமார் (பாரதிவீதி-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7159)

யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

ஒரு புதிய சிந்தனை உருவாகுவதற்கு தடையாய் இருக்கக் கூடியது மடமையைத் தவிர வேறு இல்லை.

- பி. டபிள்யு. பிரிட்ஜ்மேன்

ஈழநாதம்

31. மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-08-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## சமாதானத்திற்கு சவால்

கடந்த பத்தாண்டுப் போரின் பின்பும் இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியற் தீர்வு ஒன்று சாத்தியமாகுமா? என்பது குறித்து கேள்வி இன்றும் பலமாகவே உள்ளது. ஏனெனில் இவ்வளவு இழப்புக்கள், துயர்கள், அழிவுகள் என்பனவற்றின் பின்பும் சிங்களப் பேரினவாத சக்திகளும், சிங்கள அரசியல் வாதிகளும் சமாதானத் தீர்வைப் பற்றிச் சிந்திக்கத் தயாராக இல்லை என்பதே இக் கேள்விக்கான காரணமாகும்.

ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் இனப்பிரச்சினை தொடர்பாக உறுதியான நிலைப்பாடு இல்லை. நேரத்திற்கு நேரம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்கிறது. ''இலங்கையில் வடக்கு -கிழக்கில் நிகழுவது இனப் பிரச்சினையல்ல. அது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை'' என ஒரு சமயம் கூறும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜயதுங்கா, அண்மையில் இனப் பிரச்சினைத் தீர்விற்குச் சர்வதேச உதவி நாடப்படும் எனத்தெரிவித்துள்ளார். இது அரசின் குழப்ப நிலையைக் காட்டுவதாகும்.

எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏறத்தாழ இதை ஒத்த நிலைப்பாட்டையே கொண்டிருப்பினும், அண்மையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்ட கருத்து இராணுவ ரீதியான தீர்வையே அரசு மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றது. அவர் பிரிவினைக் கிளர்ச்சிவாதிகளை அடக்குவதற்கு முழு நாட்டையும் யுத்தநிலையில் வைத்திருக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேபோன்றே அடுத்த எதிர்க்கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் தனது கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இக்கட்சியின் செயலாளரான பிரேமச்சந்திரா ''சிறிது காலத்திற்கு எல்லாவற்றையும் நிறுத்தி வைத்துவிட்டு தனது கட்டுப்பாட்டிலுள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி வடக்கு-கிழக்கு யுத்தத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்'' எனக் கோரியுள்ளார்.

சிங்கள அரசியல் வாதிகளினதும் கட்சிகளினதும் நிலைப்பாடுகள் சமாதானத்திற்கும் அரசியற் தீர்விற்கும் விரோதமாக இவ்வாறு காணப்பட,

# புலிகளுடன் பேச வேண்டும் என்போரை ஒரு துப்பாக்கி இருந்தால் சுட்டுக்கொல்வேன்

## ஜாதிக சிந்தனையாளர்களின் கூச்சல்

''சிலர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை செய்யக் கோருகின்றார்கள். இராணுவம் பிரபாகரனை இவ்வளவு தூரம் விட்டு வைத்திருப்பதே புதுமையானது. எனக்கு ஆயுதம் கிடைக்குமாயின் பேச்சுவார்த்தை செய்யக் கோருபவர்களையே முதலில் சுட்டுத் தள்ளுவேன்''. இவ்வாறு குணதாச அமரசேகரா தெரிவித்தார்.

ஜூலை 15 அன்று கொழும்பு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் ஜாதிக சிந்தனைய (தேசிய சிந்தனை) அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ''வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான தீர்வுஎன்ன'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறுகையில்,

''பயங்கரவாதத்தை முறியடிப்பதே எமது நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில் புலிகள் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள். யுத்தமே இப் பிரச்சினைக்கு தீர்வு. இந்த யுத்தம் சரியாக செய்யப்படல் வேண்டும். இராணுவத்திற்காக போதி மரத்தடியில் தியானிப்பது அர்த்தமற்றது. மக்கள் அனைவரும் இராணுவத்தின் பின்னே அணி திரண்டு செல்ல வேண்டும். அப்பொழுது தான் பயங்கரவாதத்தை முறியடிக்கலாம். வெளிநாடுகளில் இருந்தும் இதற்கு உதவி பெறலாம். எங்கள் இராணுவத்தால் இதனை சாதிக்க முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. மங்கள முனசிங்க ஒரு பூனை. அந்தப் பூனையின் அண்ணன் தான் புலி. புலிகளின் யோசனைகளைக் கேட்டுத்தான் புதிய திட்டங்களைக் கூறுகின்றார்கள். எங்களைப் பொறுத்தவரை எந்தத் திட்டங்களையும் நாம் ஏற்பதாக இல்லை. பிரிந்தால் என்ன! வாக்கெடுப்பு நடத்தி யார் வென்றால் என்ன! தோற்றால் என்ன! நாம் இதை எதிர்ப்போம், என்றும் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் 'வடக்கு கிழக்கு பிரச்சினை வரலாறும் தீர்வும்' என்ற தலைப்பில் பேசியகலாநிதி நளின் டி-சில்வா தனதுஉரையின்போது 1956ம் ஆண்டில் நடைபெற்றது தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்டது அல்ல. இந்த நாட்டில் இருந்த ஏகாதிபத்திய வாதிகளின் கைக்கூலிகள்தான் இதனைத் தமிழ் இனத்திற்கு எதிரானது எனப் பிரசாரப் படுத்தினார்கள். இதனுடன் தமிழ் இனவாதக் குழுக்களும் சேர்ந்து 1956ல் நடைபெறஇருந்த சிங்கள புனரமைப்பை — அன்று இல்லாதிருந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முயற்சித்த நடவடிக்கையைத் தமிழ் இன விரோத நடவடிக்கையாகப் பிரசாரப் படுத்தினார்கள். வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் எனக் கூறப்பட்டால் பின் அதில் வரையறுக்கப்படுகின்ற பிரதேசம் சிங்கள, முஸ்லிம் மக்களின் தாயகம் அல்ல. அப்படியானால் இது சிங்கள முஸ்லிம் மக்கள் மீதான ஒடுக்குமுறை. அவர்களுக்குச் செய்யும் அநீதி. குறிப்பாகக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் சிறிது சிறிதாக குடியேறினார்கள். 20-ம்ஆண்டளவில் இப்பகுதிகளில் இவர்கள் பெரும்பான்மையானவர்கள். ஏகாதிபத்தியத்தின் நோக்கமும் சிங்களவர்களை வெளியேற்றி தமிழர்களைக் குடியேற்றுவது தான்.

சிங்களவர்கள் வாழ்ந்த இடத்தில் தமிழர்களைக் குடியேற்றினார்கள் ஆனால் சிங்களவர்கள் மீண்டும் சென்று குடியேறுவது மறுக்கப்படுகின்றது. தமிழர்கள் கிழக்கில் வாழ்வதற்கு விரோதமாக இதைக் கூறவில்லை ஆனால், சிங்கள மக்கள் மீளக் குடியமர்ந்த பின் விரோதம் காண்பிக்கப் படுகின்றது. உலக ஏகாதிபத்தியவாதிகளும், தமிழ் இனவாதிகளும் என்ன கூறுகிறார்கள்? தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் புதிய சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துங்கள் என்று ஆனால், இது புதிய குடியேற்றமேயல்ல மீளக் குடியமர்தல் உரிமை சிங்களவர்களுக்கு உண்டு. இந்த உரிமையை மறுப்பவர்கள் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளே'' எனக் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் அடுத்து உரை நிகழ்த்திய நாலக்க பிக்கு, ''தமிழர் பிரச்சினை என்பது வரலாற்றில் மிக நீண்டகாலமாகவே உள்ளது. தமிழ்நாட்டில் இருந்து அடிக்கடி நம் தாய்நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடைபெற்றது. இதுதான் தமிழ்ப் பிரச்சினை. வடக்கு - கிழக்கில் ஈழம்வாதிகளால் - தமிழ் இனவாதிகளால் - பயங்கரவாதிகளால் உருவாக்கப்பட்ட யுத்தமே இப்போது நடைபெறுவது. இப்படி இவர்களால் உருவாக்கப்பட்ட யுத்தத்திற்கு மூல காரணம் வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, முழு இலங்கையிலுமே ''தமிழ் இராச்சியம் அமைப்பது'' என்கிற நோக்கமாகும்.

புலிகளின் கைக்கூலிகளான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தன் பொறுப்பில் கூட்டிச் சென்ற பொலிசாரின் பெற்றோருக்கு என்ன நடந்தது? எமக்குச் சொல்கிறார்கள் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்பதால் அங்கு இருக்கின்றார்களாம். ஆனால் உண்மை அதுவல்ல. அவர்களும் புலிகளால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். கைக்கூலிகளான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செய்த மிகப் பெரிய தவறுகளில் இதுவும் ஒன்று.

அடுத்தவர்கள்தான் நாம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டியவர்களும் கவனமாக இருக்க வேண்டியவர்களுமான மிஷனரி சக்திகள். இவர்கள் தோலுரித்துக் காட்டப்பட வேண்டியவர்கள். இச் சக்திகளுக்கு இலங்கையைக் கீழ்ப்படிய வைக்க முடியவில்லை. ஒரு கையில் பைபிளையும், மறு கையில் 'பைனைட்'டையும் கொண்டு வந்தும் முடியாமல் போய்விட்டது சமயப் பிரசாரம் மூலம் செய்ய முடியாமல் போக அவர்கள் கண்ட புதிய வழி தான் ஈழம் வாதம். தமிழ் இனப் பயங்கரவாதம் என்பது' எனவும் குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினரான எஸ். எல். குணசேகராவும் உரையாற்றினார் என்பதுடன் அரசின் மீதும் எதிர்க்கட்சிகளின் மீதும் பலத்த கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மண்டபத்தில் நிறைந்து வழிந்த மக்கள் அவ்வப்போது ஆரவாரமாக கரகோஷம் செய்தனர் என்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.

## வடக்கு-கிழக்கில் பணிபுரிய ரஷ்ய வைத்தியர் மறுப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ரஷ்ய மருத்துவர்களைப் பணிசெய்ய நியமிப்பதென்ற சுகாதார அமைச்சின் முடிவுக்கு ரஷ்ய மருத்துவ நிபுணர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இராணுவ நடவடிக்கை உள்ள பகுதிகளில் ரஷ்ய மருத்துவ நிபுணர்கள் பணிசெய்ய மறுப்பதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பணிபுரிய 15 ரஷ்ய மருத்துவ நிபுணர்களின் சேவைகளைப் பெறத் தீர்மானித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது கியூபா, பாகிஸ்தான் மற்றும் பிரான்சு நாட்டு மருத்துவர்கள் வடக்கு-கிழக்குமாகாணங்களில் சேவையாற்றுகிறார்கள்.

## அரசு அவமதிப்பதாக பத்திரிகையாளர்கள் புகார்

[கொழும்பு]

கண்டிப் பெரகராவின் போது பத்திரிகையாளர் ...

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

## புலமைப்பரிசில் வினாத்தாள்கள்

[யாழ்ப்பாணம்]

நாடு முழுவதும் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற இருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை யாழ். மாவட்டத்தில் சுமார் 93 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இரண்டாம் கட்ட க.பொ.த. (உ/தர) பரீட்சைக்கான வினாத்தாள்களுடன் எடுத்து வரப்படவுள்ளன.

இவ் வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து அடுத்த கிழமை நாட்களில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் எனயாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[பா].[தி]

## வீரகுமாரின் பொருள்கள் ஏலத்தில் விற்பனை

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொலை செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வீரகுமாரின் டயஸ் பிளேஸ் கடையின் பொருள்கள் நீதிமன்றத்தால் ஏலத்தில் விற்கப்பட்டன. இதன் மூலம் இரண்டு லட்சத்திற்கு மேல் பணம் கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கடந்த 30-ம் திகதி ஏலத்தில் விற்கப்பட்ட இப்பொருள்கள் அரைவிலையில் விற்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை பலசரக்குப் பண்டங்கள் எனத் தெரியவருகிறது.

இதில் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான இறைச்சிப் பொருள்களை, அவை சாப்பிட உகந்தவையாக இருக்குமோ என்ற அச்சத்தில் வாங்க பலரும் மறுத்து விட்டனர்.

மாதாந்த உதவிப்பணம்

## பெறுபவர்களின் எண்ணிக்கை மாகாணசபையால் குறைப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏறத்தாழ இதை ஒத்த நிலைப்பாட்டையே கொண்டிருப்பினும், அண்மையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்ட கருத்து இராணுவ ரீதியான தீர்வையே அரசு மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றது. அவர் பிரிவினைக் கிளர்ச்சிவாதிகளை அடக்குவதற்கு முழு நாட்டையும் யுத்தநிலையில் வைத்திருக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேபோன்றே அடுத்த எதிர்க்கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் தனது கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இக்கட்சியின் செயலாளரான பிரேமச்சந்திரா ''சிறிது காலத்திற்கு எல்லாவற்றையும் நிறுத்தி வைத்துவிட்டு தனது கட்டுப்பாட்டிலுள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி வடக்கு-கிழக்கு யுத்தத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்'' எனக் கோரியுள்ளார்.

சிங்கள அரசியல் வாதிகளினதும் கட்சிகளினதும் நிலைப்பாடுகள் சமாதானத்திற்கும் அரசியற் தீர்விற்கும் விரோதமாக இவ்வாறு காணப்பட, தீவிர பௌத்த பேரினவாதிகளின் நிலைப்பாடானது சகல வளங்களையும் யுத்தத்திற்கு ஒதுக்குவதோடு மட்டுமல்ல, சமாதானம் பற்றிப் பேசுபவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்னும் நிலைப்பாட்டைக் கொண்டதாக உள்ளது. அதாவது அவர்களின் இனவெறியானது அவர்கள் தாம் எந்த மதத்தின் பாதுகாவலராகக் கூறிக் கொள்கின்றார்களோ அதன் கொள்கைக்கு விரோதமான செயற்பாட்டைக் கொண்டதாகவுள்ளது. அதாவது, புத்தபிரான் போதித்த அன்பு, கருணை என்பனவற்றிற்கு மாறாக, அவர் வெறுத்த அதிகாரம், கொலை, துன்புறுத்தல் என்பன கொள்கைகளாக மாறியுள்ளன.

பௌத்த பேரினவாதிகளின் இச் சிந்தனை வெளிப்பாட்டை ''அரசியற்கட்சிகள் யாவும் தமது நடவடிக்கைகள் யாவற்றையும் இடை நிறுத்திவிட்டு யுத்தத்தில் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும். கட்சிப் பணம், கோவில்கள், பள்ளிகள், பௌத்த விகாரைகள் ஆகியவற்றின் சொத்துக்கள் யாவும் யுத்தத்திற்குச் செலவிடப்பட வேண்டும்'' என்ற மாத்தறையைச் சேர்ந்த சீனாங்க தேரோவின் கோரிக்கையில் இருந்து புரிந்து கொள்ளலாம். மூப்பு, பிணி ஆகியவற்றிற்காக ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இத்தேரரின் இக்கோரிக்கையானது, அவரது இறுதி ஆசை என்றும் கூறலாம்.

இதற்கும் மேலான தீவிரபோக்குடைய பௌத்த பேரினவாதிகளும் உள்ளனர். இவர்கள் சமாதானம் என்ற பேச்சைக் கேட்டாலோ கொதித்தெழுகின்றனர். ''சிலர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை செய்யக் கோருகின்றனர். இராணுவம் பிரபாகரனை இவ்வளவு தூரம் விட்டு வைப்பதே புதுமையானது. எனக்கு ஆயுதம் கிடைக்குமாயின் பேச்சுவார்த்தை செய்யக் கோருபவர்களையே முதலில் சுட்டுத்தள்ளுவேன்.'' இவ்வாறு தனது இனவெறியை வெளிப்படுத்தியுள்ளார் ஜாதிக சிந்தனையாளர் அமைப்பின் 'பிதா' குணதாசா அமரசேகரா.

பேரினவாதிகளின் இந்நிலைப்பாடே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பது குறித்து கேட்க வைத்துள்ளது. இதனைத் தமிழர் மட்டும் புரிந்து கொண்டால் போதாது, உலகமும் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதே இனப்பிரச்சினை தீர்வில் உள்ள சிக்கலை அவர்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

## வடக்கு-கிழக்கில் பணிபுரிய ரஷ்ய வைத்தியர் மறுப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ரஷ்ய மருத்துவர்களைப் பணிசெய்ய நியமிப்பதென்ற சுகாதார அமைச்சின் முடிவுக்கு ரஷ்ய மருத்துவ நிபுணர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இராணுவ நடவடிக்கைஉள்ள பகுதிகளில் ரஷ்ய மருத்துவ நிபுணர்கள் பணி செய்ய மறுப்பதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பணிபுரிய 15 ரஷ்ய மருத்துவ நிபுணர்களின் சேவைகளைப் பெறத் தீர்மானித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது கியூபா, பாகிஸ்தான் மற்றும் பிரான்சு நாட்டு மருத்துவர்கள் வடக்கு-கிழக்குமாகாணங்களில் சேவையாற்றுகிறார்கள்.

## அரசு அவமதிப்பதாக பத்திரிகையாளர்கள் புகார்

[கொழும்பு]

கண்டிப் பெரகராவின் போது பத்திரிகையாளர் பொலிசாரால் தாக்கப்பட்டதாகவும், அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் பத்திரிகையாளர் அதிகாரிகளால் தொந்தரவு செய்யப்பட்டதாகவும் வாராந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் புகார் தெரிவிக்கப்பட்டது. பத்திரிகையாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட இந்தப் புகார் கவனிக்கப்படும் என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

கொம்பனித்தெருவில்சென்ற வருடம் மனித உரிமைகள் தினத்தன்று பத்திரிகையாளர் தாக்கப்பட்டது தொடர்பான அறிக்கையை வெளியிட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கைப் பாதிக்காத பகுதிகள் தான் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

## பதிவு, உதவி வைத்தியர்கள் சம்பளம் அதிகரிப்பு

ஆர். எம். ஓ, ஏ. எம். ஓ தரத்திலுள்ள வைத்தியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாதாந்த விசேட அலவன்ஸ் ரூபா 675 வழங்கப்பட உள்ளது. இதன்படி புதிய உதவி வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் மாதவேதனம் ரூ 5095 ஆக இருக்கும்.

புதிய சம்பள விவரம் வருமாறு:-

விசேட தரம்:- 74,440-7X3000-95 400, முதலாம் வகுப்பு;- 55 440-11x1560-72,600, இரண்டாம் வகுப்பு-42,720-12X1200-57,120,

## பங்கீட்டு அட்டை இல்லை மண்ணெய் கிடைக்கவில்லை

### வடமராட்சி கிழக்கு மக்கள் கவலை

(வடமராட்சி கிழக்கு)

இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்கில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படுவரும் 2 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை.

இம் மக்களுக்கான பங்கீட்டு அட்டையினை பிரதேச செயலர் அலுவலகம் இதுவரை வழங்காததினாலேயே சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் மண்ணெண்ணெயைப் பெற முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

'அ' 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருந்தவர்களுக்கு மட்டும் அட்டை ஒன்று ஏழு ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இப் பங்கீட்டு அட்டை ஒன்று ஐந்து ரூபா வீதமே வழங்கப்பட்டுள்ளது. (36)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

1990ஆம் ஆண்டு இலங்கை நூலகவியல் சங்கத்தில் நூலகவியல் கற்கை நெறிக்குப் பதிவு செய்த மாணவர்களின் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் இன்று மு. ப. 11 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அமைப்பாளர் கேட்டுள்ளார்.

## புலமைப்பரிசில் வினாத்தாள்கள்

[யாழ்ப்பாணம்]

நாடு முழுவதும் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற இருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை யாழ். மாவட்டத்தில் சுமார் 93 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இரண்டாம் கட்ட க.பொ.த. (உ/தர) பரீட்சைக்கான வினாத்தாள்களுடன் எடுத்து வரப்படவுள்ளன.

இவ் வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து அடுத்த கிழமை நாட்களில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[பா].[தி]

## 38-வது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(வடமராட்சி)

இன்பருட்டி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தின் 38ஆவது ஆண்டு விழாவும், இம் மண் பெற்றெடுத்த மாவீரர்கள் நினைவாக காண்டீபன் கழக விளையாட்டுப்போட்டியும்இம்மாதம் 14, 15 ஆம் திகதிகளில் காண்டீபன் அரங்கில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்குறித்த இரண்டு தினங்களிலும் இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டி, கழக வீரர்களின் வீரதீரச் செயல்கள், கழகங்களுக்கான அஞ்சல் ஓட்டம், ஆண்களுக்கான கயிறு இழுத்தல், மல்யுத்தம், குத்துச்சண்டை, தலையணைச் சண்டை விநோத உடை, ஆணழகன் போட்டி என்பன இடம் பெறும்.

கலை நிகழ்ச்சியாக 'வீரத்தின் சின்னம்' என்னும் சரித்திர நாடகமும் இடம்பெறவுள்ளது. (யோ)

## வீரகுமாரின் பொருள்கள் ஏலத்தில் விற்பனை

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொலை செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வீரகுமாரின் டயஸ் பினேஸ் கடையின் பொருள்கள் நீதிமன்றத்தால் ஏலத்தில் விற்கப்பட்டன. இதன் மூலம் இரண்டுலட்சத்திற்கு மேல் பணம் கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கடந்த 30-ம் திகதி ஏலத்தில் விற்கப்பட்ட இப்பொருள்கள் அரைவிலையில் விற்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை பலசரக்குப் பண்டங்கள் எனத் தெரியவருகிறது.

இதில் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான இறைச்சிப் பொருள்களை, அவை சாப்பிட உகந்தவையாக இருக்குமோ என்ற அச்சத்தில் வாங்க பலரும் மறுத்து விட்டனர்.

## மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் எண்ணிக்கை மாகாணசபையால் குறைப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் நூற்றுக்கணக்கானோருக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் மாகாண சபையினால் நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் வாழும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் எண்ணிக்கையை வடக்கு கிழக்கு மாகாணசபை மட்டுப்படுத்தியுள்ளது.

இதனால் நீண்டகாலமாக உதவிப்பணம் பெற்றுவந்த நூற்றுக்கணக்கான வறியவர்களுக்கு பணம் வழங்குவது ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் நிறுத்தப்பட்டுள்ளதுடன் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடைய வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பணமும் மாகாணசபையால் குறைக்கப்பட்டுள்ளது.

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக்கரையில் இரண்டு கடவுச்சீட்டுகள் மற்றும் வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் என்பன அடங்கிய ''பேர்ஸ்'' ஒன்று தவறவிடப்பட்டு K. தேவராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## எரிபொருள் நிலைய பணம் கொள்ளை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 1,25,000 ரூபா விற்பனைப் பணம் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை இரவு நிலையத்துக்கு ஆயுதபாணிகளாக வந்த 5 பேர் துப்பாக்கி முனையில் அங்கிருந்த விற்பனைப் பணத்தை கொள்ளையடித்துச் சென்றதாக நிலைய முகாமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

## பனங் கைப்பணி பயிற்சி

பனை அபிவிருத்திச் சபையும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் இணைந்து பனங் கைப்பணி உற்பத்தியாளர்களுக்கான இருவாரவதிவிட பயிற்சிநெறியொன்றை நடாத்தவுள்ளன.

கைதடியில் அமைந்திருக்கும் பனைவள ஆராய்ச்சி நிலையத்தில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் இப் பயிற்சி நெறியில் பனங் கைப்பணியில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் மற்றும் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுகள் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த கைப்பணிப் போதனாசிரியர்கள் 30 பேர் கலந்து கொள்கின்றார்கள்.

இப்பயிற்சியின்போது கைப்பணியோடு தொடர்பான நவீன முறைகள், அடிப்படைத் தொழில் நுட்பங்கள், கலை நுணுக்கங்கள் மற்றும் அதன் உற்பத்தியோடு தொடர்புடைய விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களில் செயல்முறை விளக்கமும், விரிவுரைகளும் நடைபெறும்.

இவ்வாறானதொரு பயிற்சி கிளிநொச்சியிலும் நடைபெறுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

## பொது அறிவுத் தேர்வு

[பருத்தித்துறை]

இந்திய இராணுவத்தால் புலோலியில் சுட்டுக்கொல்லப்பட்ட சமூக சேவையாளரும், ஆசிரியருமான அமரர் அம்பலவாணர் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் நடாத்தப்படும் ''வாணர் ஞாபகார்த்த பொது அறிவுத்தேர்வு'' இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. [25]

## புதிய கிளை திறப்பு

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் குடத்தனை, அம்பனில் அமைக்கப்பட்டுள்ள 'ராஜன் நகர்' எழுச்சிக் குடியிருப்பில் புதிய கிளைக்கடை ஒன்றினை நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அக் குடியிருப்பில் வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த 94குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இம் மக்களின் நன்மை கருதியே இக் கூட்டுறவுக் கடை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்
'Wild Geese'
'வைல்ட். கீஸ்'
[தமிழ் விளக்கம்]
சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்
தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)

# சிறுபான்மையினர் உரிமை; போராடியே பெறவேண்டும்

## ஹமீத் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை இனம் நன்கு வாழவேண்டுமாயின் சலுகைகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. சலுகைகள், உரிமைகள் கேட்டுப் பெறுவனவல்ல. உரிமைகளை பெறவேண்டுமாயின் போராடியே பெறவேண்டும். நாம் சிறுபான்மையினர். எனவே எமக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை. இது சாத்தியமும் ஆகாது. சுதந்திர மக்களாக நாம் வாழவேண்டும். இதையே இலட்சியமாகக்கொள்ளவேண்டும். இவ்வாறு நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சிங்கள மொழிச் சட்டம் அமுலான பின்னரே பிரச்சினைகள் எழுந்தன. வடக்கு-கிழக்குப் பிரச்சினை கூட இதன் விளைவாகவே எழுந்தது.

தொழில் வசதி இல்லாதிருப்பதனாலேயே தென்னிலங்கையில் இளைஞர் கிளர்ச்சிகள் தோன்றின என மேலும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டவருக்கு விசா வழங்குவதில் நிபந்தனை

(கொழும்பு)

வெளிநாட்டவர்கள் சிறிலங்காவில் தங்குவதற்கான விசா வழங்குவதில் விஜேதுங்கா அரசு புதிய நிபந்தனைகளை விதித்துள்ளது. தென் இந்தியர்கள், அமெரிக்கர்கள் மற்றும் ஜெர்மனியர்கள் சிறிலங்காவிற்கு வந்து இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இனிமேல் திருமணத்தின் பெயரால் சிறிலங்காவில் தங்கும் வெளிநாட்டு ஆண்கள் 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இலங்கையில் உள்ள வங்கி ஒன்றில் காப்புறுதிப் பணமாகச் செலுத்த வேண்டும் என்றும் வெளிநாட்டவர்கள் திருமணம் செய்த பெண்களைக் கைவிட்டுச் செல்லும் பட்சத்தில் இந்தப் பணம் சம்பந்தப்பட்ட பெண்களுக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப்படும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு ஆணையாளர் ஜே. ஏ. ஆரியசேனா தெரிவித்தார்.

# ஜனசவிய திட்டங்களை உடன் ஆரம்பிக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு சிறிலங்கா அரசினால் அனுமதிக்கப்பட்ட ஜனசவிய செயற்திட்டங்களை உடன் ஆரம்பிக்க யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற ஜனசவிய செயற்திட்டம் சம்பந்தமான கூட்டத்திலேயே சகல உதவி அரச அதிபர்களுக்கும் யாழ் அரச அதிபர் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார். (பா), (க), (தி)

இனத்துவே

விடக்கூடாது. ஓரே கோயில் வளவில் ஓரே இரவில் மூன்று குண்டு வெடிப்பு சம்பவங்கள் நேர்ந்துள்ளன இந்த சம்பவங்களின் பின்னணியில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கின்றது. என்றார்

தமிழ் நாட்டிலிருந்து

# ஒருதொகுதி அகதிகள் 12 ஆம் திகதி திரும்புவர்

தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளில் முதற்தொகுதியினரை ஏற்றிக் கொண்டு எம். வி. நிக்கோபார் என்ற கப்பல் இம் மாதம் 12 ஆம் திகதியன்று சென்னையிலிருந்து திருகோணமலைக்கு புறப்படும் என்று தமிழ்நாடு அகதிகள் மறுவாழ்வுக் கழக இயக்குநர் ராம்தாஸ் கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் எம். வி. நிக்கோபார் என்ற கப்பல் ஒரு மாத வாடகைக்கு பெறப்பட்டிருப்பதாகவும் இக் கப்பலில் 1800 பேர் பயணம் செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

கலந்துரையாடல்

செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சமுகமளிக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் மண்ணெய் கொண்டுவருவது தொடர்பான நடைமுறை ஆராயப்படவுள்ளது.

உயர்கல்வி பற்றிய

# கருத்தரங்கு

பாடசாலைகளின் இன்றைய உயர்கல்வி நிலைமை பற்றிய கருத்தரங்கு இன்று முற்பகல் 9.00 மணிக்கு யா / இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், க. பொ. த(சா / த), (உ / த) வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச்

# சாலை மறியலில் ஈடுபட்ட 1400பேர் சென்னையில்கைது

(சென்னை)

சென்னை நகரக் குடிநீர்த் தட்டுப்பாட்டை மாநில அரசு தீர்க்கத் தவறிவிட்டதாகக் கூறி வீதி மறியலில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் 1400 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்கள்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்கள் செல்வராஜ், பருதிஇளம்வழுதி, தி. மு. க. இளைஞர் அவைச் செயலாளர் மு. க. சாலீம், முன்னாள்

யலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் 15 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

குமாரியில்

டாரங்கள் தெரிவித்தன.

மேலும் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் ''குமண'' கப்பலிலும் மற்றுமொரு தொகுதி உணவு மற்றும் பொருள்கள் ஏற்றும்

31-ம் நாள் நினைவலைகள்



மண்ணில்:
10-08-1932

விண்ணில்:
09-07-1993

அமரர்
திருவாளர்
**வேலாயுதம் நாகலிங்கம்**
அவர்கள்
(பிரபல வர்த்தகர்–சங்கானை)

அன்பும் அறமும் பண்பும் உயர் தவமும்
உன்னில் நிறைவாக்கி இம் மண்ணில் -என்னாளும்
கண்ணின் மணிபோலக் காதலித்து எமைக்காத்த
அன்புருவே எங்கள் இல்லத்து ஒளி விளக்கே
நீர் எமக்குச் சொல்லாமல் ஓடிச்சிவலோகம் சென்றடைந்து
ஓர் திங்கள் ஓடியதே இந்நாளில் தேவன் திருப்பாதம்
சேர்ந்து நீர் சாந்திபெறப் போற்றுகின்றோம் உம்மை நினைத்து

உங்கள் நினைவில் நிறையும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய் தந்தையர். மருமக்கள்,
பேரமக்கள், பெறாமக்கள்,
சகோதரர், மைத்துனர்மார்,
மைத்துனிமார்,
உற்றார், உறவினர்கள்.

வைத்தியசாலை வீதி,
சங்கானை.
[5639]

ஓராண்டு நினைவலைகளில்...



தென் இந்தியத்திருச்சபை–யாழ். பேராயம்

## முதியோர் இல்லம்

இணுவில் மக் லியோட் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப் படவுள்ள முதியோர் இல்லத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 30-08-93க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விபரங்கட்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செயலாளர்,
மக் லியோட் வைத்தியசாலை,
இணுவில்,
சுன்னாகம்.

(சி-7126)

INSTITUTION OF ENGINEERS,
SRILANKA CENTRE
NORTHERN PROVINCE.

## INTRODUCTORY COURSE FOR PRE-UNIVERSITY ENGINEERING STUDENTS

Above Centre is intending to institute an Introductory Course in Engineering for Students who are awaiting admission to the Engineering Course at Universities in Sri Lanka.

A discussion on this matter would be held at Geography Seminar Room, Selvanayagam Block of the University of Jaffna on 11th August at 15.00 hrs.

- SECRETARY

'Vimalam'
Nallur Cross Read. Nallur - Jaffna

(சி-7149)

31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
1932 – 01 – 16

மறைவு:
1993 – 07 – 09

**தம்பிராசா செல்லம்மா**

தாமரைப் பூவின் பொன்சிரிப்பு — எங்கள்
தங்கத் தாயின் பொன்விரிப்பு

அன்புருவே எங்கள் இல்லத்து ஒளி விளக்கே
நீர் எமக்குச் சொல்லாமல் ஒடிச்சிவலோகம் சென்றடைந்து
ஓர் திங்கள் ஓடியதே இந்நாளி் தேவன் திருப்பாதம்
சேர்ந்து நீர் சாந்திபெறப் போற்றுகின்றோம் உம்மை நினைத்து

உங்கள் நினைவில் நிறையும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய் தந்தையர், மருமக்கள்,
பேரமக்கள், பெறாமக்கள்,
சகோதரர், மைத்துனர்மார்,
மைத்துனிமார்,
உற்றார், உறவினர்கள்.

வைத்தியசாலை வீதி,
சங்கானை.
[5639]

# ஓராண்டு நினைவலைகளில்...



அமரர்

## திரு. சுப்பையா தியாகராஜா

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

மண்ணில் மைந்தனாய்: 21-08-1930
விண்ணில் தெய்வமாய்: 21-07-1992
திதி:- 08-08-1993

ஒரு சின்ன நினைவு போல் ஒரு வருடம்
ஒழிந்தின்று போனதுவோ புதுமை ஐயா!
இருந்தும் நீர் எம்மோடு இவ்வுலகில்
இனிதே வாழ்வதெல்லாம் பசுமை ஐயா!
வருந்தி உழைத்தெம்மை வாழவைத்தீர்
வாழ்நாளெல்லாம் எமக்கே தந்து சென்றீர்!
உருவத்தால் நாம் கண்ட தெய்வம் ஐயா
உமை நாமே என்றென்றும் மறவோம் ஐயா!

தங்களின் பிரிவால் துயருறும்
பாசம்மிகு குடும்பத்தினர்.

113, சந்தானமாதா கோவில் லேன்,
அரியாலை. (5625)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஊரை ஏற்றிக் கொண்டு எம். வி. நிக்கோபார் என்ற கப்பல் இம் மாதம் 12 ஆம் திகதியன்று சென்னையிலிருந்து திருகோணமலைக்கு புறப்படும் என்று தமிழ்நாடு அகதிகள்

உயர்கல்வி பற்றிய

## கருத்தரங்கு

பாடசாலைகளின் இன்றைய உயர்கல்வி நிலைமை பற்றிய கருத்தரங்கு இன்று முற்பகல் 9.00 மணிக்கு யா/இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், க. பொ. த(சா/த), (உ/த) வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் இன்றைய தினம் தவறாது கலந்துகொண்டு கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க உதவுமாறு கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### அரசின்

களுடன் நாளை திங்கட்கிழமை யாழ். அரசாங்க அதிபர் கொழும்பு திரும்புவார் என நேற்றிரவு ரூபவாஹினி அறிவித்தது.

### பொருளாதார

மனிதாபிமான முறையில் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என அரசாங்கத்தரப்பு புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக யாழ் அரச அதிபர் ஊடாக அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்துவருவதாக அரசாங்கம் மக்கள் தொடர்புசாதனங்கள் ஊடாக போலியான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் எம். வி. நிக்கோபார் என்ற கப்பல் ஒரு மாத வாடகைக்கு பெறப்பட்டிருப்பதாகவும் இக் கப்பலில் 1800 பேர் பயணம் செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

## சாலை மறியலில் ஈடுபட்ட 1400பேர் சென்னையில்கைது

(சென்னை)

சென்னை நகரக் குடிநீர்த் தட்டுப்பாட்டை மாநில அரசு தீர்க்கத் தவறிவிட்டதாகக் கூறி வீதி மறியலில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் 1400 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்கள்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்கள் செல்வராஜ், பருதிஇளம்வழுதி, தி. மு. க. இளைஞர் அவைச் செயலாளர் மு. க. சாலீம், முன்னாள் எம். எல். ஏக்கள் உட்பட மறியலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் 15 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

### மருத்துவ

பிரிட்டனிடமிருந்து விபரப் பட்டியல் கிடைத்த பின்னர் கப்பல்கள் மூலம் விரைவில் மேற்படி உபகரணங்களை கட்டம் கட்டமாக எடுத்துவருவதற்கு யாழ். போதனா வைத்தியசாலை நடவடிக்கை எடுக்கும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (தி). (பா)

### எக்ஸ்—றே

பாணம் எடுத்து வர கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியிருந்தும் கப்பல் வசதி இன்றி இவற்றை இங்கு எடுத்து வருவது சாத்தியப்படவில்லை.

மேலும் சகல விதமான எக்ஸ்-றே பிலிம்களும் ஓரளவு தம்மிடம் தற்சமயம் இருப்பதாகவும் மேற்படி மின் பிறப்பாக்கிகளில் ஒன்றையேனும் இங்குஎடுத்து வரப்படுமிடத்து மட்டுமே எக்ஸ்-றே பிரிவின் பூரண செயற்பாட்டை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா). (தி)

க்குமாறு யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் மண்ணெய் கொண்டுவருவது தொடர்பான நடைமுறை ஆராயப்படவுள்ளது.

### குமாரியில்

டாரங்கள் தெரிவித்தன.

மேலும் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் "குமண" கப்பலிலும் மற்றுமொரு தொகுதி உணவு மற்றும் பொருள்கள் ஏற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக் கப்பல் எதிர்வரும் 17 ஆம் திகதி பருத்தித்துறையை வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா

### செயலகத்தில்

இதனால் செயலகத்துக்கு சில வாரங்கள் தாமதமாகவே மண்ணெண்ணெய் எடுத்து வரப்படும் என்று கொழும்பில் இருந்து நேற்று யாழ். திரும்பிய யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

எனினும் தனியாருக்கு குறிப்பிட்டளவு மண்ணெண்ணெய் எடுத்துவரப்படவுள்ளது. இவ்வாறு எடுத்துவரப்படும் மண்ணெண்ணெயை ஒரு கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் யாழ். செயலகம் ஈடுபட்டுள்ளது. (க)

### கிழக்கிலங்கை

கள் இதுவரை குறைந்தது 200 பேருக்கு மேல் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

### போர்விமானங்கள்

சாலைகள்அமைந்துள்ள இடங்கள் பற்றியதகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தகவல்களின் அடிப்படையிலேயே கடந்த 23ஆம் திகதி சிறிலங்கா விமானப் படை விமானங்கள் இத்தகைய தொழிற்சாலைஒன்றை தாக்கி நிர்மூலம் செய்துள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஆனால் தயாரிக்கப்பட்ட விமானங்களை புலிகள் பாவித்ததற்கான தகவல்கள் எதுவும் சிறிலங்கா பாதுகாப்புப் படையினருக்கு கிட்டவில்லையாம்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 07-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10545

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-2212, 28-1020, 27-8160, 28-4255, 26-7272, 28-4691, 28-6996, 24.0917, 24-5041, 26-4809, 42-2862, 27-1375, 28-0587, 28-9557, 26-2745, 24-9337, 26-4450, 24-7672, 27-8515.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1169, 41-9759.

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1932 — 01 — 16
மறைவு: 1993 — 07 — 09

## தம்பிராசா செல்லம்மா

தாமரைப் பூவின் பொன்சிரிப்பு — எங்கள்
தங்கத் தாயின் பொன்விரிப்பு
பாமலர் சிந்தும் திருநாளில் — நாங்கள்
பாசத்தைக் காணத் துடிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (5632)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 28-02-1952

மறைவு: 11-07-1993

திருமதி

## வேலுப்பிள்ளை செல்லம்மா

(D. R. O. லேன், தெல்லிப்பளை)

10-08-93-ல் எமது இல்லத்தில் (மூத்தவிநாயகர் கோவிலடி (தேவு வீதி), ஆனைக்கோட்டை) காலை 10.00 மணியளவில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன்: வேலுப்பிள்ளை.
பிள்ளைகள்: பாலசுந்தரம் (டுபாய்), சர்வேந்திரன் (டுபாய்), சுகேந்திரன் (டுபாய்), சுகிர்தறஞ்சினி, அகிலறஞ்சினி, றாகினி.
மருமக்கள்: இராஜேந்திரன், கமலநாதன்.
பேரப்பிள்ளைகள்: தனுஷன், பிறேமினி, ஜிந்துயா
சகோதரன்: கந்தசாமி.

தற்போதைய முகவரி:
மூத்தவிநாயகர் கோவிலடி,
தேவு வீதி, ஆனைக்கோட்டை. (5638)